# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*******

முறையீட்டு மனு எண்.38/2017/பே.1

ஆணை நாள்: 03 -09-2018

திரு. தா.பிரான்சிஸ்,
அக்கிவிளை வீடு,
வடக்குத் தெரு,
மார்த்தாண்டம்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 165. –– முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
அருமனை பேரூராட்சி,
மற்றும் பலர்
கன்னியாகுமரி மாவட்டம் – 629 165. –– எதிர் மனுதாரர்கள்.

ஆணை.

கன்னியாகுமரி மாவட்டம், அக்கிவிளை வீடு, வடக்குத் தெரு, மார்த்தாண்டம் பகுதியினை சேர்ந்த திரு. பிரான்சிஸ், த/பெ. திரு.தாஸ், என்பவரது 01.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு 06.03.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.38/2017 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனு மீது உரிய விளக்க அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு.பிரான்சிஸ், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், அருமனை பேரூராட்சியில் 2014–15ம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (I.U.D.M) ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில், மாரப்பாடி–குறிச்சிக்கடவு சாலையில் அலங்கார ஒடு பதித்து வடிகால் அமைக்கும் பணியினை மேற்கொண்டதாகவும். மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 25.05.2014ல் "New Sunday Express" செய்தித்தாளில், சென்னை பதிப்பில் விளம்பரப்படுத்தப்பட்டதாகவும், இப்பணி குறித்து அருமனை பேரூராட்சி அளவில் உரிய முறையில் விளம்பரம் செய்யப்படவில்லை எனவும், மேற்படி சாலைப் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு உரிய முறையில் தயாரிக்கப்படவில்லை

எனவும், பணிக்காக கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களுக்கான பட்டியல்கள்/ரசீதுகள்
உரிய சான்றிதழ்கள் பெறப்படவில்லை எனவும் தெரிவித்து விசாரணை கோரி மனுவினை
இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 10.03.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில், மேற்படி முறையீட்டு
மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, அருமனை பேரூராட்சி
செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி அருமனை பேரூராட்சி செயல்
அலுவலர் தனது கடித ந.க.எண். 86/2013/ அ.1/நாள்.04.04.2017ன் மூலம் மேற்படி முறையீட்டு
மனுவிற்கான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தில், 06.07.2017 அன்று ஆஜரான நாகர்கோவில் மண்டல
பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளர் திரு.மா.மாடசாமி சுந்தர்ராஜ்,
அருமனை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திருமதி. வி.சி.ரமாதேவி, மற்றும்
அருமனை பேரூராட்சி முன்னாள் இளநிலை பொறியாளர் திருமதி. கே.லதா ஆகியோர்
மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தங்களது ஒருங்கிணைந்த விளக்கங்களை
கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

“......முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள மாறப்பாடி-குறிச்சிக்கடவு அலங்கார ஓடு
பதித்தல் மற்றும் வடிகால் அமைக்கும் பணிக்கு பேரூராட்சிகளின் இயக்குநரக
செயற்பொறியாளர் (பொறுப்பு) அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.1010/2013/அ.4
நாள்.29.05.2014ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதாகவும், இப்பணி தொடர்பாக
பேரூராட்சிகளின் இயக்குநர் மூலமாக மாநிலம் முழுமைக்கான பணிகள் குறித்து
ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மாநிலம் முழுமைக்கும் உள்ள செய்தி தாள்கள் மூலம்
வெளியிடப்பட்டதாகவும், அந்த செய்தி அருமனை பேரூராட்சி பகுதிகளிலும்
பிரசுரிக்கப்பட்டதாகவும், அருமனை பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் அரசு இணையதளம்
மற்றும் மாநில அரசிதழிலும் வெளியிட்டு, அருமனை பேரூராட்சியில் பதிவு செய்த
ஒப்பந்தக்காரர்களுக்கு பதிவுத் தபால் மூலம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி விளம்பரங்களின் அடிப்படையில் உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள் கலந்து
கொண்டதாகவும், ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு முன்பு 26.06.2014ல் அருமனை
பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்பந்தக்காரர்களின் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றதாகவும்,
02.07.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் கோரப்பட்டவாறு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி
திறக்கப்பட்டதாகவும், 04.07.2014ல் இதற்கான கூர்ந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டதாகவும்,
இக்கூர்ந்தாய்வுக் குழுவில் உதவி செயற்பொறியாளர், நாமக்கல், உதவிப் பொறியாளர்,
நாமக்கல் ஆகியோர் அங்கத்தினர்களாக இருந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கூர்ந்தாய்வுக் கூட்டம் பேரூராட்சிகளின் இயக்குநரகத்தில்
நடைபெற்றதாகவும், இக்கூட்டத்தில் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த இரண்டு
ஒப்பந்தக்காரர்களும் கலந்து கொண்டதாகவும், தொழில் நுட்ப கூர்ந்தாய்வு கூட்டத்தில்
தொழில் நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்தக்காரர்களின் Price Bid , 07.07.2014ல் திறக்கப்பட்டு
கலந்து கொண்ட இருவருடைய ஒப்பந்த விலை விகிதம் சரிபார்க்கப்பட்டு.

திரு.P.ஜெயக்குமார் என்பவர், 10.49% மதிப்பீட்டுத் தொகைக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்டதால், பேரூராட்சி மன்றத் தீர்மான எண். 451/நாள்.11.07.2014 ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 14.07.2014ல் பணி வழங்கப்பட்டதாகவும், 26.06.2014 அன்று நடைபெற்ற ஒப்பந்த ஆய்வுக் கூட்டத்தில் ஒப்பந்தக்காரர்கள் கலந்து கொண்டுள்ளதால் ஒப்பந்த விளம்பத்தினை உள்ளூர்காரர்கள் தெரிந்து கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்தள்ளனர்.

12.12.2014ல் பணி முடிக்கப்பட்டு சட்டபூர்வமாக பிடித்தம் செய்யவேண்டிய தொகை போக, ஒரே நேரத்தில் பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாகவும், இந்த பணியினை மாநிலத் தரக்கட்டுப்பாட்டு அலுவலரால் (ஒய்வு பெற்ற நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர்) ஆய்வு செய்யப்பட்டு, தரக்கப்பட்டுப்பாடு சான்று அளித்துள்ளதாகவும், மேலும் அரசு வணிகம் மற்றும் தொழில் துறையால் ஏற்படுத்தப்பட்ட தூத்துக்குடி மண்டல தரக்கட்டுப்பாட்டு துறையினரால் தரம் குறித்து பரிசோதனை செய்யப்பட்டு 23.10.2014ல் தரச்சான்று வழங்கப்பட்டதாகவும், தரச்சான்றில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட தரத்தில் பணி உள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் இது IS383–1970 தர ஆய்வுக்கு ஒத்துப்போகிறதாகவும் சான்று வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சாலையில் உபயோகப்படுத்தப்பட்ட கற்கள் 40 mm, 20mm மற்றும் பிற பொருட்கள் சம்பந்தமாக சான்றும் பெறப்பட்டதாகவும், பணியின்போது சட்ட விதிகளின்படி பொறியாளரால் அளவீடு செய்யப்பட்டு, உதவி செயற்பொறியாளரால் மேலளவு செய்யப்பட்டு முறையாக தரச்சான்று பெற்று பணிகள் நிறைவடைந்ததாகவும், பணிகள் நடைபெறும்போது பொதுமக்களிடமிருந்தோ, மற்றவர்களிடமிருந்தோ எந்த குறைபாடுகள் குறித்தும் மனுக்கள் பெறப்படவோ யாரும் குறை கூறவோ இல்லை எனவும் தங்கள் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

இம்முறைமன்ற நடுவ 07.11.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீடு தொடர்பாக எதிர்மனுதாரர்களின் 06.07.2017ம் நாளிட்ட வாக்குமூல நகல்கள் முறையீட்டு மனுதாரர் திரு.பிரான்சிஸ் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, மேற்படி வாக்குமூலங்களின் மீதான தனது ஆட்சேபணை/கோரிக்கைகள் விவரத்தினை இரண்டு வாரங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் திரு.பிரான்சிஸ், தனது 28.12.2017ம் நாளிட்ட அறிக்கை மூலம் மேற்படி வாக்குமூலங்களின் மீதான தனது சில ஆட்சேபணைகளைத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 08.01.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் 28.12.2017ம் நாளிட்ட ஆட்சேபணை அறிக்கையினை இணைத்து, அதில் தெரிவித்துள்ளவாறு மேற்படி ஒப்பந்தம் கோரப்படுவது தொடர்பான விதிமுறைகள் மற்றும் அரசாணைகளின் அடிப்படையில் தனது அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) ன் கீழ் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் இயக்குநர் தனது கடித ந.க.எண்.1092/2017/ப.4/நாள். 10.07.2018ன்படி தனது மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை இம்முறையீட்டு நடுவத்தில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

அருமனை பேரூராட்சிக்குட்பட்ட மாறப்பாடி–குறிச்சிக்கடவு சாலை அலங்கார ஓடுகள் பதித்தல் மற்றும் வடிகால் அமைத்து மேம்பாடு செய்யும் பணியானது ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2013–14ம் ஆண்டில் மேற்கொள்ள பேரூராட்சி மன்ற தீர்மான எண். 3, நாள்.03.11.2011ன்படி நிறைவேற்றப்பட்டு, அரசாணை எண்.179/நகராட்சிகள் நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை/நாள். 14.05.2014ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2013–14ன் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்கும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் 'THE SUNDAY EXPRESS' நாளிதழில் 25.05.2014ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டதாகவும், மேலும் அருமனை பேரூராட்சி செயல் அலுவலரால் மாநில ஒப்பந்த செய்தி மலரில் 12.06.2014ல் பணி குறித்த முழு விவரங்களுடன் விளம்பரப்படுத்தப்பட்டதாகவும், மேலும் இணையதளம் வாயிலாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையிலேயே பேரூராட்சியில் 26.06.2014ல் நடைபெற்ற முன்னார்ந்த ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் கூட்டத்தில் 6 ஒப்பந்தக்காரர்கள் கலந்து கொண்டதாகவும், இவ்வாறு அனைத்து நடைமுறைகளுடன் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் இணையதளத்திலும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளநிலையில் முறையீட்டு மனுதாரரால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது போதுமானதாக இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது ஏற்புடையதல்ல என பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புகார் மனுவில், பணியில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் கொள்முதல் செய்ததற்கான விலைப் பட்டியல் மற்றும் ரசீதுகள் இல்லை என குறிப்பிட்டுள்ளது தொடர்பாக பணிகளுக்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்ட விலை நிரக்கு பட்டியல்படி (Schedule of Rates) தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்ட விவரம் அளவீடு புத்தகத்தில் (M.Book) குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையிலேயே பணி முடிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் பணிகள் மேற்கொள்வதற்கு கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் ரசீது மற்றும் விலைப்பட்டியல் பேரூராட்சி மூலம் பேணப்பட வேண்டிய அவசியம் எழவில்லை எனவும், மேலும் வேலையின் தரம் குறித்து Department of Industries and Commerce Regional Testing Laboratory Harbour Link Road. Tutoicorin, ல் இருந்து (1) சான்று எண்.1362/2014–15 நாள்.23.10.2014 ன்படி Compressive strength Result, மற்றும் (2) சான்று எண் Metal.40mm & 20 mm Concrete cube பெறப்பட்டுள்ளதாகவும் , பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பேரூராட்சி சாலைகள் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள குறிச்சிக்கடவு சாலையில பணிகள் மேற்கொள்ள மக்கள் மன்ற பிரதிநிதிகளால் வேலைகள் தேர்வு செய்யப்பட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு முறையாக ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டு, நிர்வாக மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு பணிகள் முறையாக நடைபெற்றுள்ளதாகவும், மேற்படி பணியானது

பொறியாளரால் அளவிடப்பட்டு, உதவி செயற்பொறியாளரால் மேலளவு செய்யப்பட்டு தரச்சான்று பெறப்பட்டு பணி நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், மக்கள் மன்றத்தால் பணி தேர்வு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணி நிறைவடைந்துள்ள நிலையில் தனி நபர் ஒருவரால் மேற்படி பணி குறித்து தேவையற்ற சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளது என்ற அறிக்கை நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் தரப்பில் ஆதார ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படாத நிலையில் மேற்படி பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையின் அடிப்படையில் இம்முறையீட்டு மனு தொடர்பான, தொடர் நடவடிக்கை கைவிடப்படலாம் என்று கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

செயலாளர். 7/9/2018

பெறுநர்

1.திரு. தா.பிரான்சிஸ்,
அக்கிவிளை வீடு,
வடக்குத் தெரு,
மார்த்தாண்டம்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 165.

2.செயல் அலுவலர்,
அருமனை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.